சங்க விதிகளுக்குட்பட்டு சங்கம் அமைக்க கதர் வாரியம் உதவி செய்யும். மேலும், அச்சங்கத்தின்மூலம் இடம் வழங்கப்பட்டால் மண்பாண்டத் தொழிற்கூடம் கட்ட அரசால் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதன் விற்பனைகளைப் பெருக்கிட, நவீன வசதிகளுடன்கூடிய புதிய கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை உருவாக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் கடைகள் மொத்தம் 154 உள்ளன. அந்த 154 கடைகளில் 49 கடைகள் வேறு மாநிலங்களில் உள்ளன. மீதமுள்ள 105 கடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஒவ்வொரு கடையாக, latest-ஆக எடுத்து, அதன் விற்பனையை double ஆக்கிக்கொண்டு வருகிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு முடிந்தால் திருப்பத்தூரில் ஒரு கட்டடத்தினை எடுத்து விற்பனை நிலையத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

ஆரம்ப சுகாதார நிலையம்

***11355—திரு. ஆ. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 25]

(அ) கடத்தூர் ஒன்றியம், தாளநத்தம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கடத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த தாளநத்தம் கிராமம் ஏற்கெனவே ராமியனஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தையும், குருபரஹள்ளி துணை சுகாதார நிலையத்தையும் சார்ந்திருக்கின்றது. அந்தக் கிராமத்தினைப் பொறுத்தவரை, 5,476 என்கின்ற அளவில் பொதுமக்கள் இருக்கின்றார்கள். மேலும், தாளநத்தம் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் கடத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் சிந்தல்பாடி ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் குருபரஹள்ளி துணை சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தாளநத்தம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தாளநத்தம் கிராமம் மட்டும் 5,000 மக்கள்தொகைக் கொண்டது. தாளநத்தம், புத்திரெட்டிப்பட்டி, கேத்துரெட்டிபட்டி, வேப்பிலைப்பட்டி, ஐயம்பட்டி ஆகிய எந்தப் பகுதிகளிலிருந்து சென்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின்படி, அவர் சொல்கின்ற ராமியனஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 13 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. அந்தப் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இந்த 5 ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் எப்படிச் சென்றாலும், 7 கிலோ மீட்டர் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. நடுவில் இரயில்வே லைன் இருப்பதால், அங்கே மக்கள் போக முடியாத நிலை இருக்கிறது.*

அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதேபோல, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும், விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அதிகம் வாழ்கின்ற பகுதி. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலினை மறுபரிசீலனை செய்து அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரை, 14 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 45 துணை சுகாதார நிலையங்களும் இருக்கின்றன. தாளநத்தம் பகுதி, கடத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. கடத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கடத்தூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், அதன்கீழ் 6 துணை ஆரம்ப சுகாதார நிலையங்களும், சிந்தல்பாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், அதன்கீழ் 5 சுகாதார நிலையங்களும், ராமியனஹள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும், அதன்கீழ் 5 சுகாதார நிலையங்களும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. அண்மையில் 16 ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட ராமியனஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ், குருபரஹள்ளி, ராமியனஹள்ளி, தேன்கனிக்கோட்டை மற்றும் வகுத்துப்பட்டி ஆகிய 4 சுகாதார நிலையங்களிலும் தொலைதூர மருத்துவச் சேவை,* Teleconsultation Service *தொடங்கப்பட்டிருக்கின்றது. எனவே, அப்பகுதி மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் என்பது தொடர்ச்சியாக செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பாப்பிரெட்டிப்பட்டி வட்டார*

2022 ஏப்ரல் 25]

மருத்துவமனை, 32 படுக்கைகள் மட்டும்தான் கொண்டதாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற வட்டார மருத்துவமனைகள் எல்லாம் 62 படுக்கைகள் கொண்டதாக இருக்க வேண்டும். எனவே, அதை 62 படுக்கைகள் கொண்டதாக மேம்படுத்தப்பட வேண்டும். அதேபோல அங்கு மகப்பேறு மருத்துவர், General Medicine, General Surgeon *பணியிடங்கள் காலியாக இருக்கின்றன.* Anesthesiologist–*மயக்கவியல் மருத்துவர் பணியிடமும் காலியாக இருக்கின்றது. மேலும், பிணவறையில்* A.C. *வசதி இல்லை; அங்கு* icebox–*ம் இல்லை, இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டார மருத்துவமனைக்குச் செய்து கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல, பாப்பிரெட்டிப்பட்டி வட்டார அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, கூடுதல் படுக்கைகளை ஏற்படுத்தித் தருவதற்கும், காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கருத்துகளைப் பெற்று, விரைவில் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல கடத்தூரை பொறுத்தவரை, 15–வது நிதி ஆணையத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சம் செலவில் அவர் சொன்ன இந்தப் பகுதிகளெல்லாம் பயன்பெறுகின்ற வகையில் Block Public Health Unit *ஒன்று இப்போது தொடங்கப்பட இருக்கின்றது. அதன்மூலம் சிறப்பான ஆய்வகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அந்த ஆய்வகத்தின்மூலம் 58 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. எனவே, அவர் சொன்ன எல்லா கிராமங்களும் இதன்மூலம் அதிக அளவில் பயன்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சபெருமாள்பட்டி, தங்கநகர், அரப்பளிபட்டி, வைரபெருமாள்பட்டி, செங்கல்பட்டி, நெட்டவேலம்பட்டி,*

ப. கல்லாங்குத்து, நடுப்பட்டி, புளியஞ்சோலை, ஆலத்துடையான்பட்டி, கருப்பம்பட்டி, ஆ. கல்லாங்குத்து, சீத்தக்காடு, பனந்தோப்பு, மங்களாபுரம், ஆங்கியம், அழகாபுரி, கோனேரிபட்டி, சாலக்காடு, R. கோம்பை, வேலம்பட்டி, சிறுநாவலூர், கட்டப்பள்ளி, ரெட்டியார்பட்டி, S.N. புதூர் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்தப் பகுதியில்தான் சுற்றுலாத் தலமான புளியஞ்சோலை அமைந்துள்ளது. பிரியாணிக்கு புகழ்பெற்ற சீரக சம்பா அரிசி இந்தப் பகுதியில்தான் விளைகின்றது. இந்தப் பகுதிக்கு, ஏற்கெனவே அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு எங்களுடைய மாவட்ட துணை இயக்குநர்மூலம் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தப் பகுதியின் மையப் பகுதியான பச்சபெருமாள்பட்டியில் அரசுக்குச் சொந்தமான இடமும் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு, இந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பச்சபெருமாள்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தனது தொகுதிக்குட்பட்ட மொத்த பட்டிகளையும் பட்டியலிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அவர் கேட்டுக் கொண்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, 5 unit Dialysis அமைப்பு ஒன்று வேண்டுமென்று அவர் கோரிக்கை வைத்திருக்கிறார். அதுவும் இப்போது தயார் நிலையில் இருக்கிறது. மிக விரைவில் அது பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில், அது தற்காலிகமாக

2022 ஏப்ரல் 25]

வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டும் இன்னும் அந்தக் கட்டடப் பணிகள் தொடங்கப்படவில்லை. அதுபோல், நாகூர் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம், திருக்கண்ணபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இரண்டும் மிகவும் பழுதடைந்துள்ளன. திருமருகல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் விஷக்கடி மருந்துகள் இல்லையென்பதால், அதுபோன்ற நேரங்களில் அங்கிருந்து நாகப்பட்டினம் பொது மருத்துவமனைக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. திருமருகலைப் பொறுத்தவரையில், வயல்வெளிகள் நிறைந்த பகுதி. கிராமங்கள் நிறைந்த பகுதி. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் விஷக்கடி மருந்துகள் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, ஏற்கெனவே இருக்கின்ற துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சீரழிந்த நிலையில் இருக்கின்ற கட்டடங்களைப் புனரமைப்பதற்காகத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 15–வது நிதி ஆணையத்தின்கீழ் இந்த ஆண்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்த நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் புதுப்பிக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், விஷக்கடிக்கான மருந்துகளை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் விரைந்து அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் தாலுகா மருத்துவமனை, 100 ஆண்டுகளுக்கு மேலான, 146 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை. இந்த மருத்துவமனைக்கு* CT

Scan வசதி வேண்டுமென்று 1–9–2021 அன்று நான் இந்தப் பேரவையில் கேள்வி எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலளிக்கின்றபோது, ஏற்கெனவே இந்த மருத்துவமனைக்கென்று வாங்கப்பட்ட CT Scan ஆனது, கோவையிலுள்ள ESI மருத்துவமனைக்கு கொரோனா தொற்றுப் பரவலின் காரணத்தினால் கொடுக்கப்பட்டது. கண்டிப்பாக இந்த நிதியாண்டில் அந்த மருத்துவமனைக்கு CT Scan வழங்கப்படும் என்று ஏற்கெனவே பதிலுரையில் தெரிவித்திருந்தார்கள். இதுவரையிலும் அந்த CT Scan வழங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது அந்த மருத்துவமனைக்கு CT Scan வழங்குவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த மருத்துவமனைக்கான CT Scan, பேரிடர் காலத்தில் கோவை அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது உண்மை. அவரது கோரிக்கையை ஏற்று, TNMSC மூலம் CT Scan ஒன்று புதிதாகக் கொள்முதல் செய்வதற்கு இந்த ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, CT Scan அந்த மருத்துவமனையில் மிக விரைவில் பொருத்தப்படவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.

திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேசூர் பேரூராட்சியில் 6 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. தேசூர் பேரூராட்சியில் மட்டுமல்லாமல், தேசூர் பேரூராட்சியைச் சுற்றியுள்ள சுமார் 15 கிராமங்களிலுள்ள பொதுமக்கள் அந்த மருத்துவமனைக்குச் சென்று பயன்பெற்று வருகிறார்கள். ஆகவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 6 படுக்கைகள் போதாத நிலை உள்ளதால், அதை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், வந்தவாசி அரசு பொது மருத்துவமனை சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு,

2022 ஏப்ரல் 25]

ஒருங்கிணைந்த வட ஆற்காடு மாவட்டமாக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட மருத்துவமனை. இப்போது அங்கு மக்கள்தொகை அதிகமாகியிருக்கின்ற காரணத்தினாலும், விபத்துகள் அதிகம் நடைபெறுகின்ற காரணத்தினாலும், அந்த மருத்துவமனையைத் தரமுயர்த்தி, அங்கு CT Scan, MRI Scan, Dialysis Unit, Operation Theatre ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், அங்கு CMO–Chief Medical Officer 2014 ஆம் ஆண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக முடியுங்கள்.

திரு. S. அம்பேத்குமார்: 2014 ஆம் ஆண்டு CMO பணியில் இருக்கும்போது இறந்துவிட்ட காரணத்தினால், அங்கு இதுநாள்வரை Chief Medical Officer நியமனம் செய்யப்படவில்லை. அங்கு CMO–ஐ நியமனம் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வந்தவாசி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தரமுயர்த்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றாலும்கூட, அங்கிருக்கின்ற மருத்துவமனையின் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அந்த மருத்துவமனையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்ட மதிப்பீடுகள் விரைவில் தயாரிக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், அங்கு CMO பணியிடம் காலியாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் விரைவில் நிரப்பப்படும்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆலங்குளம் தொகுதியில், ஆலங்குளம் பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவமனை,

தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அங்கே போதுமான உபகரணங்கள், மருத்துவர்கள் மற்றும் தாலுகா மருத்துவமனைக்கான அடிப்படை வசதிகள் இல்லாத இந்தச் சூழ்நிலையில் அதிகமான மக்கள் வருகின்ற அந்த ஆலங்குளம் அரசு தாலுகா மருத்துவமனைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு அறிவிப்புகளை இந்த மானியக் கோரிக்கையில் வெளியிடுவார்களா? அந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கை; அவர்கூட அங்கே ஆய்வு செய்திருக்கின்றார். அவருக்கு அது நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருப்பதைப்போன்று, 29 ஆம் தேதி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தை அவரும் அமர்ந்து கேட்கும்போது நிச்சயம் ஆலங்குளத்திற்கான பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜூனன் அவர்கள்.

திரு. பொ. அர்ஜூனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஓங்கூர் ஊராட்சியில் செயல்பட்டு வந்த துணை ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது செயல்படாமல் உள்ளது. இதை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கே அந்த மாவட்டத்தின் சுகாதார அலுவலர்களை அனுப்பி, அது செயல்படாமல் இருப்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து, செயல்படுத்துவதற்கான

2022 ஏப்ரல் 25]

அவசியத்தை உணர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலைப்பெற்று, நிச்சயம் அதைச் செயல்பட வைப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

169—

பேருந்து வசதி

***7033—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு பேருந்து நிலையத்திலிருந்து ராசிபுரம் பேருந்து நிலையம் வரையிலான வழித்தட நீளம் 38.1 கிலோ மீட்டராகும். இது தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, 1989 அத்தியாயம் I உட்பிரிவு 3 (e)-ன்படி, நகரப் பேருந்துகளின் இயக்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட இயக்கத் தூரத்தைவிட அதிகமாகும். எனவே, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து இயக்க தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் வரை நகரப் பேருந்து வேண்டுமென்று கடந்த ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் தேதி*